
## இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் வியாபாரரிதியான தடைகளை குறைக்கவும் அதனை விரிவாக்குவதற்கு உதவி புறியும். இலங்கை- இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை 1998 இல் கைச்சாத்திடப்பட்டு 2000 இல் நடைமுறைக்கு வந்தது. இந்த உடன்பட்டிக்கையானது இரு நாட்டிற்கும் இடையிலான இறக்குமதித் தீர்வையை குறைத்ததுடன் சில பொருட்களுக்கு நீக்கப்பட்டது. பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களுக்கு முற்றாக இறக்குமதி தீர்வை நீக்கப்பட்டது. இருந்தபோதிலும் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு இந்தியாவிற்கான ஏற்றுமதியில் விரிவாக்கம் காணப்படவில்லை. இக் கட்டுரை குறிப்பால் உணர்த்துவது பதனிடப்பட்ட உணவு பொருட்களுக்கான இறக்குமதி தீர்வை மாத்திரம் நீக்குவது போதுமானதாகாது. இறக்குமதி தீர்வை தவிர்ந்த மற்ற விடயங்களுக்கும் இறக்குமதி தீர்வைக்கு சமமான முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

## இந்தியாவிற்கான சாதகமான ஏற்றுமதிக்கான எதிர்பார்ப்புகள்

இந்தியாவிற்கான ஏற்றுமதி உணவுப் பொருள்கள் மீதான சராசரி தீர்வை 30%. இத் தீர்வையானது சுமார் 150% வரை செல்லக்கூடியது. ISFTA இன் கீழ் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களுக்கு தீர்வை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது இலங்கை ஏற்றுமதி நாடுளுடன் போட்டி போடும் வல்லமையை அதிகரித்துள்ளது.




மூலம்: [www.trademap.org](http://www.trademap.org)

இலங்கை உணவுப் பொருட்டளுக்கு இந்தியாவில் அதிக கிராக்கி உள்ளதாக இந்திய இறக்குமதியாளர்களும், இலங்கை ஏற்றுமதியாளர்களும் உறுதி

செய்துள்ளனர். இறக்குமதி தீர்வை விலக்கு, அதிக கிராக்கி என்பன காணப்பட்ட போதிலும் இந்தியாவிற்கான ஏற்றுமதியானது பெரும் சவாலாகவே காணப்படுகின்றது. பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதி ஆண்டொண்டிறிற்கு 38% வளர்ச்சியைக் காட்டியுள்ளது (2011-2013 தவிர்ந்த) (Exhibit 1). இவ் வளர்ச்சியானது இந்தியா அல்லாத பிற நாடுகளுக்கு ISFTA இன் சலுகை இல்லாமல் பெறப்பட்டது. ஆகையால் இந்தியச் சந்தையில் இலங்கை உணவுப் பொருட்களின் ஏற்றுமதி அதிக வளர்ச்சியை அடைந்திருக்க வேண்டுமென்பது நியாயமான எதிர்பார்ப்பு. மாறாக இந்தியாவுக்கான ஏற்றுமதியின் வளர்ச்சியின் எழுச்சியை நிலை கொள்ள தோல்விகண்டது.

## இந்தியாவுக்கான ஏற்றுமதி: தீர்வை அல்லாத தடைகளும் அதன் விளக்கமும்

போட்டி நிலைமைகளும், அதிக கிராக்கியும் சந்தித்த போதிலும் இந்தியாவுக்கான ஏற்றுமதியில், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் பாரிய அளவில் வீழ்ச்சி உள்ளது. இதற்கு தீர்வை அல்லாத தடைகளே (Non-Tariff Barrier) மூல காரணமென, ஆய்வுகளும் ஏற்றுமதியாளர்களது கருத்துக்களும் ஊர்ஜிதம் செய்கின்றன.

ஒதுக்கீட்டுக் கட்டுப்பாடு, சிக்கலானதும் மற்றும் வினைத்திறனற்ற எல்லை விதிமுறைகள், முரண்பாடான விதிகளும் விதிமுறைகளும், வெளிப்படைத் தன்மையற்ற பொறுப்பு சொல்லும் நிலைமை என்பவை தீர்வையல்லாத தடைகளுக்கான உதாரணங்கள். இத் தடைகள் பொருட்களின் கொள்வனவு விலையை கூட்டுவதுடன் உள்ளூர் உற்பத்தி பொருட்களுடனான போட்டியில்லா தன்மையை உருவாக்குகிறது.

இறக்குமதி அனுமதிக் கோரிக்கை, சிக்கலான முரண்பாடான இறக்குமதி விதி முறைகள், தெளிவற்ற சிட்டைக் கோரிக்கை, வேறு தாமதங்கள் மற்றும் இந்திய தர விதிமுறைகளை ஒப்புவிக்க ஏற்படும் மேலதிக செலவுகள் என்பனவை பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வதில் காணப்படும் சில தீர்வையல்லாத தடைகள் ஆகும். ஆகையினால் தீர்வை விலக்கு இருந்த போதிலும் தேவையற்ற தாமதங்கள், மேலதிக செலவுகள் இலங்கை உற்பத்திகளுக்கு இந்திய சந்தையில் போட்டியற்ற தன்மையை உருவாக்குகிறது. மேலும் ஏற்றுமதியாளர்களுக்கு கொள்முதலாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதில் சிக்கலையும் உருவாக்குகிறது.

## இறுதிச் சுருக்கம்

பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில் இருக்கும் தீர்வை விலக்கு மட்டும் போதுமானதல்ல என்பது தெளிவு. இறக்குமதியல்லாத தடைகள் தொடரும்வரை இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் எதிர் மறை விளைவுகளையே ஏற்படுத்தும்.

இலங்கை புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை கைச்சாத்திடத் தாயாராகி வரும் நிலையில், இந்த ஆய்வானது இன்னும் நல்ல பிரதிபளிப்புக்கான பேரம் பேச வேண்டிய அவசியத்தை சுட்டி காட்டுகின்றது. தீர்வையல்லாத தடைகளை நீக்குவதற்கான பிரத்தியேக நடவடிக்கைகள் ஏற்றுமதியின் வெற்றிக்கான எதிர்பார்ப்புகளை உருவாக்கும்.